**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை

U/s 173 B.N.S.S
~~(Under Section 154 Cr.P.C)~~
பா.நா.கு.ந.ச மசிசு 173 ~~(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)~~

C 8101988

1. District : Madurai மாவட்டம் | PS: VAAC காவல்நிலையம் | Year: 2024 ஆண்டு | FIR No.: 17/2024 மு.த.அ. எண் | Date: 24.12.2024 நாள்

2. (i) Act சட்டம்: PC Act 1988 as amended by Prevention of Corruption (Amendment) Act 2018. Sections பிரிவுகள்: sec 7
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: B.N.S.S Act 2023 Sections பிரிவுகள்: 106 BNSS.
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் | Date from : 23.12.2024 நாள் முதல் | Date to : நாள் வரை
Time Period : நேர அளவு | Time from : 16.05 hrs நேரம் முதல் | Time to : 19.45 hrs. நேரம் வரை
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 24.12.2024 | Time நேரம் : 07.35 hrs.
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 24.12.2024 | Time நேரம் : 08.15 hrs.

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Typed.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் 2 km, South.
Beat Number : முறைக் காவல் எண் | (b) Address : முகவரி Periyar Improvement Project Annexure House (Vaigasi Illam), WRD, PWD Penny cuick campus, Madurai.
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : — District : —
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் Tmt. A. Chitrakala | (b) Father's/ ~~Husband's~~ Name : தந்தை / கணவர் பெயர் Ayyamperumal
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 06.05.1981 | (d) Nationality : நாட்டினம் Indian | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் —
Date of Issue : வழங்கப்பட்ட நாள் — | Place of Issue : வழங்கப்பட்ட இடம் —
(f) Occupation : தொழில் Inspection Cell Inspector/ Special Revenue Inspector | (g) Address : முகவரி o/o the District Inspection cell officer Madurai

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
Tr. P.S. Sayed Habeeb, Age 57/2024, S/o Syed Ibrahim, Assistant Executive Engineer, WRD, Periyar Vaigai Basin Sub-Division-I, Madurai.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
— Nil —

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary) —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Seperate sheets pages 3 to 8 attached

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ………………… Rank ………………… to take up the Investigation / Refused Investigation / transferred to PS…………………………………………on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ………………………… பதவி ………………… நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ………………………………………… காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

A. Chithrakala 24/12/24

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

[signature] 24/12/2024

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 24.12.2024 09.05 hrs.
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் K. KUMARAGURU
Rank: நிலை …………………No. எண் ……….
Inspector of Police
V&AC, Madurai

Honoured Sir,

Submitted,

இன்று 24.12.2024-ம் தேதி காலை 07.35 மணிக்கு, காவல் ஆய்வாளர் K.குமரகுரு ஆகிய நான், மதுரை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலவலகத்தில் அலுவலில் இருந்த போது, மதுரை மாவட்ட ஆய்வுக்குழு அலுவலக ஆய்வுக்குழு ஆய்வாளர் / தனி வருவாய் ஆய்வாளர் திருமதி.அ.சித்ரகலா அவர்கள் மதுரை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் ஆஜராகி என்னிடம் தனி அறிக்கை அளித்தார். மதுரை ஊ.த.க. பிரிவு, காவல் துணை கண்காணிப்பாளர் அவர்களின் உத்தரவின் பேரில், மேற்படி தனி அறிக்கை மற்றும் அத்துடன் ஒப்படைத்த மதுரை கோகலே ரோடு, பென்னிக்குக் வளாகம் பொதுப்பணித்துறை அலுவலகங்கள் பெரியார் மேம்பாட்டு திட்டம் வை.கா.சீ. இணைப்பு இல்லத்தில் நடத்தப்பட்ட திடீர் இணை ஆய்வு குறிப்புரை 23.12.2024 - 16.05 மணி முதல் 19.45 மணி வரை, திடீர் இணை ஆய்வின் போது கைப்பற்றப்பட்ட ரொக்கப்பணம் ரூ.1,11,800/-, பணம் வைக்கப்பட்டிருந்த காக்கி கவர், இரண்டு ஆவணங்கள் மற்றும் மேற்படி இணைப்பு இல்லத்தில் இருந்த மதுரை நீர்வளத்துறை, பெரியாறு வைகை வடிநில உபகோட்டம் - 1, உதவி செயற்பொறியாளர் திரு. சையது ஹபீப் மற்றும் உதவிப்பொறியாளர் திரு. பிரபாகரன் ஆகிய இருவரிடம் பெற்ற வாக்குமூலம் ஆகியவற்றை பார்வையிட்டேன். தனி அறிக்கையில் உள்ள விபரம் பின்வருமாறு. அனுப்புநர் திருமதி. அ. சித்ரகலா, ஆய்வுக்குழு ஆய்வாளர் / தனி வருவாய் ஆய்வாளர், மாவட்ட ஆய்வுக் குழு அலுவலகம், மதுரை மாவட்டம். பெறுநர் காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, மதுரை. ந.க.எண். 22 / 2024 / ஐ1, நாள் : 24.12.2024, அம்மா, பொருள் : மதுரை மாவட்டம் - திடீர் இணை ஆய்வு - நீர்வளத்துறை - பெரியாறு வைகை வடிநில உபகோட்டம் - 1, மதுரை அலுவலகத்தில் பணியாற்றும் உதவி செயற்பொறியாளர் திரு.சையது ஹபீப் அவர்கள் நீர்வளத்துறையின் மூலமாக அரசால் மேற்கொள்ளப்படும் பணிகளுக்காக சம்பந்தப்பட்ட காண்ட்ராக்டர்களிடம் பணி செய்து முடித்த பில்களில் தனது கையெழுத்து போட்டு அவற்றை பணமாக்குவதற்காக கமிஷனாக லஞ்சம் வாங்குவதாக கிடைத்த இரகசிய தகவலின் பேரில் 23.12.2024-ம் தேதி திடீர் இணை ஆய்வு மேற்கொண்டது - ரூ.1,11,800/- பணம் கைப்பற்றப்பட்டது - தனி அறிக்கை அனுப்புதல் - மேல் நடவடிக்கை எடுக்க கோருதல் குறித்து. 23.12.2024-ம் தேதியன்று, மதுரை கோகலே ரோட்டில் உள்ள பென்னிகுயிக் வளாகத்தில் செயல்பட்டுவரும் பொதுப்பணித்துறை - நீர்வளத்துறை, பெரியாறு வைகை வடிநில உபகோட்டம் - 1, மதுரை அலுவலகத்தில் பணியாற்றும் உதவி செயற்பொறியாளர் திரு. சையது ஹபீப் அவர்கள் நீர்வளத்துறையின் மூலமாக அரசால் மேற்கொள்ளப்படும் பணிகளுக்காக சம்பந்தப்பட்ட காண்ட்ராக்டர்களிடம் அவர்கள் பணி

செய்து முடித்த பில்களில் தனது கையெழுத்து போட்டு அவற்றை பணமாக்குவதற்காக கமிஷனாக லஞ்சம் வாங்குவதாக இரகசிய தகவல் கிடைத்திருப்பதாக மதுரை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் திரு.க. குமருகுரு அவர்கள் தெரிவித்தார்கள். அதன்பேரில், அவரும் அத்தகவலை தனது தகவலாளிகள் மூலம் விசாரித்து விட்டு, நேற்று (23.12.2024) மதியம் சுமார் 15.00 மணிக்கு மதுரை ஊ.த.க. பிரிவு அலுவலகத்திற்கு வந்து, பின்பு, நான் அழைத்ததின் பேரில், காவல் ஆய்வாளர்கள் திரு.குமரகுரு, திரு.ரமேஷ் பிரபு மற்றும் அவர்களது போலீஸ் பார்ட்டியினருடன் இணைந்து 23.12.2024-ஆம் தேதி 15.15 மணிக்கு புறப்பட்டு, சுமார் 15.25 மணி முதல், மதுரை கோகலே ரோடு பென்னிகுயிக் வளாகம் வந்தடைந்து, மேற்படி வளாகத்தின் மேற்கு பக்கம் வடக்கு பார்த்து உள்ள வை.கா.சீ. இல்லம் மற்றும் பெரியாறு வைகை வடிநில உபகோட்டம் -1 அலுவலகம் அருகில் மறைவாக வாகனங்களை நிறுத்திவிட்டு, மேற்படி இடங்களை தொடர்ந்து இரகசிய கண்காணிப்பு மேற்கொண்டதில் வை.கா.சீ. இல்லம் - பெரியாறு மேம்பாட்டு திட்ட இணைப்பு இல்லம் கட்டடத்தின் உள்ளே காண்ட்ராக்டர்கள் கையில் பையுடன் உள்ளே செல்வதும், வெளியே வருவதுமாக இருந்தார்கள். அதனைத் தொடர்ந்து, நேற்று மாலை 16.05 மணிக்கு திடீர் இணை ஆய்வு மேற்கொள்ள மேற்படி வடக்கு திசை நோக்கி அமைந்துள்ள பெரியாறு மேம்பாட்டு திட்ட இணைப்பு இல்லம் கட்டடத்தின் உள்ளே நான், போலீஸ் பார்ட்டியுடன் சென்ற போது, அங்கே நுழைவுவாயிலின் கிழக்கு பக்கம் வடக்கு பக்க ஜன்னலின் முன்புறம் போடப்பட்டிருந்த மேஜைக்கு முன்பாக வடக்கு பார்த்து அரக்கு கலர் பிளாஸ்டிக் சேரில் வடக்கு திசை நோக்கி வெள்ளை கலர் முழுக்கை சட்டை மற்றும் கிரே கலர் பேண்ட் அணிந்து அமர்ந்து, பின்னால் விசாரித்து தெரிந்த மேற்படி அலுவலக உதவி செயற்பொறியாளர் திரு. சையது ஹபீப் அவருக்கு முன்பிருந்த மேஜையில் இருந்த பைல்களில் கையெழுத்து போட்டு கொண்டிருந்தார். அவரது இருக்கைக்கு கிழக்கு பக்கம் பென்டா கலர் பிளாஸ்டிக் சேரில் மற்றொரு அலுவலரான பின்னால் விசாரித்து தெரிந்த மேற்படி அலுவலக உதவி பொறியாளர் திரு. பிரபாகரன் சிமிண்ட் கலர் கட்டம் போட்ட அரைக்கைசட்டை மற்றும் வெள்ளை நிற பேண்ட் அணிந்து மேற்கு திசை நோக்கியவாறு அமர்ந்திருந்தார். அவர்கள் இருவரிடமும், ஆய்வுக்குழு ஆய்வாளராகிய நான் என்னையும், மதுரை ஊ.த.க. பிரிவு காவல் ஆய்வாளர்கள் திரு. குமரகுரு, திரு.ரமேஷ் பிரபு மற்றும் போலீஸ் பார்ட்டியினரை அவரிடம் அறிமுகம் செய்த பின்னர், மேற்படி அறையில் திடீர் இணை ஆய்வு மேற்கொள்வது குறித்து தகவல் தெரிவித்தேன். அப்போது, அந்த அலுவலர்கள் இருவரும் சற்று பதட்டத்துடன் தங்களது இருக்கையை விட்டு எழுந்து நின்றனர், அவர்களில் வெள்ளை நிற முழுக்கை சட்டை அணிந்திருந்த நபர் தனது பெயர் P.S. சையது ஹபீப் என்றும், தான் மதுரை நீர்வளத்துறை பெரியாறு வைகை வடிநில உப கோட்டம் - 1-ன் உதவி செயற்பொறியாளராக கடந்த 13.12.2021-ம் தேதி முதல் பணிபுரிந்து வருவதாகவும், இன்று

(23.12.2024)-ம் தேதி காலை திண்டுக்கல் மாவட்டத்தில் நடைபெற்ற தங்கள் துறை குறைதீர் முகாம் கூட்டத்திற்கு சென்று வந்துவிட்டு, மதியம் 14.30 மணி முதல் தனது கட்டுப்பாட்டில் உள்ள இந்த பெரியாறு வைகை மேம்பாட்டு திட்ட இணைப்பு இல்லத்தில் வைத்து தற்போது அலுவலக கோப்புகளை பார்த்து கொண்டிருப்பதாகவும், தன்னுடன் அருகில் அமர்ந்து அலுவல் சம்பந்தமாக பேசிக்கொண்டிருந்த அலுவலர் திரு. பிரபாகரன் என்றும் அவர் தனக்கு கீழே செயல்பட்டு வரும் பெரியாறு வைகை வடிநில உப கோட்டம் -1-ன் உதவி பொறியாளராக வேலை செய்து வருவதாகவும் தெரிவித்து, மேற்படி அறையை திடீர் இணை ஆய்வு மேற்கொள்ள சம்மதம் தெரிவித்தார். அதன்பேரில், திரு. சையது ஹபீப் அவர்களை சோதனையிட்ட போது, அவர் அணிந்திருந்த பேண்ட்டின் இடது பக்க பாக்கெட்டில் இருந்து காக்கி நிற காகித கவரை எடுத்து அதிலிருந்து இரண்டு கத்தைகளாக இருந்த ஐந்நூறு ரூபாய் நோட்டுக்களை எடுத்து ஆஜர் செய்தார். அதில் ரூ.1,00,000/- (ரூ.500 X 200) காணப்பட்டது. அந்த பணம் குறித்து அவரிடம் நான் விசாரித்த போது, அப்பணம் தனது தங்கை ஜெய்லாணிக்கு கொடுப்பதற்காக தான் கொண்டு வந்த பணம் என்று கூறினார். மேற்படி பணம் எவ்வாறு கிடைக்கப்பெற்றது என கேட்ட போது, தகுந்த முகாந்திரம் கூறவில்லை. அவர் கூறிய விபரம் ஏற்றுக்கொள்ள கூடியதாக இல்லாத காரணத்தால் அவரிடமிருந்து சந்தேகத்தின் அடிப்படையில் பணம் ரூ.1,00,000/- (ரூ.500 X 200)-த்தையும், அப்பணம் வைக்கப்பட்டிருந்த காக்கி கவரையும் நான் கைப்பற்றினேன். தொடர்ந்து, மேற்படி சையது ஹபீப் அவர்கள் தனது சட்டைப்பையின் மேல்பக்க இடது பக்க வெளி பாக்கெட்டில் வைத்திருந்த பணத்தை ஒரு ஐந்நூறு ரூபாய் கத்தை, ஒரு நூறு ரூபாய் கத்தை, ஒரு ஐநூறு ரூபாய் அத்துடன் சில ரூபாய்களை எடுத்து ஆஜர் செய்தார். அதனை நான் வாங்கி எண்ணிப்பார்த்த போது, ஐந்நூறு ரூபாய் கத்தையில் பணம் ரூ.10,000/- (ரூ.500 X 20), நூறு ரூபாய் கத்தையில் பணம் ரூ.1,800/- (ரூ.100 X 18) மற்றும் ஒரு ரூ.500/- நோட்டு, இரண்டு ரூ.100/- நோட்டுக்கள் மற்றும் இரண்டு ரூ.20/- என ரூ.740/- ஆக மொத்தம் ரூ.12,540/- அவரது சட்டைப்பையில் இருந்தது. அந்த பணம் குறித்து அவரிடம் நான் விசாரித்த போது, அப்பணத்தில் ரூ.11,800/-யை தனது தங்கை ஜெய்லாணிக்கு கொடுப்பதற்காக தான் கொண்டு வந்த பணம் என்றும், மேலும், ரூ.740/- தனது சொந்தப்பணம் என்றும் கூறினார். மேற்படி பணம் எவ்வாறு கிடைக்கப்பெற்றது என கேட்ட போது, தகுந்த முகாந்திரம் கூறவில்லை. மேலும், அவர் கூறிய விபரம் ஏற்றுக்கொள்ள கூடியதாக இல்லாத காரணத்தால் அவரிடமிருந்து சந்தேகத்தின் அடிப்படையில் அவர் தனது சட்டைப்பையில் இருந்து எடுத்து ஆஜர் செய்த பணத்தில் ரூ.11,800/- (ரூ.500/- X 20, ரூ.100/- X 18)த்தை கைப்பற்றினேன். மேலும், அவரது சொந்தப்பணம் ரூ.740/- அவரிடமே திரும்ப கொடுத்தேன். தொடர்ந்து, சையது ஹபீப் அவர்களின் உடைமை குறித்து கேட்ட போது, அவர்

அமா்ந்திருந்த இருக்கைக்கு முன்பு உள்ள மேஜை மீது வைத்திருந்த அவரது கைப்பையை எடுத்து ஆஜர் செய்தார். அதனை பார்வையிட்டதில், அதில் அலுவல் சம்பந்தப்பட்ட குறிப்புகள் அடங்கிய பேப்பர்கள் இருந்தது. மேலும், அவரது இருக்கைக்கு முன்பிருந்த மேஜையின் டிராயர்களை சோதனையிட்டதில் பழைய பிளாஸ்டிக் பைகள் காலியாக காணப்பட்டது. தொடர்ந்து, மேற்படி சையது ஹபீப் அவர்களுடன் இருந்த உதவி பொறியாளர் திரு. பிரபாகரன் அவர்களை விசாரித்த போது, தான் பாசனப்பிரிவு எண். 1-ன் உதவி பொறியாளராக கடந்த 01.03.2024-ம் தேதி முதல் பணிபுரிவதாகவும், மேலும், கடந்த 01.05.2024-ம் தேதி பாசன பிரிவு எண்.-2யை கூடுதல் பொறுப்பாக கவனித்து வருவதாகவும், தான் உதவி செயற்பொறியாளர் திரு.சையது ஹபீப் அவர்கள் பெரியாறு மேம்பாட்டு திட்ட இணைப்பு இல்லத்தில் அமர்ந்து பணி செய்து கொண்டிருப்பதாக தகவல் தெரிந்து, தான் திரு. சையது ஹபீப் அவர்களை சந்தித்து பேசிக்கொண்டிருந்த போது, சுமார் 5 நிமிடத்தில் ஆய்வுக்குழுவினராகிய தாங்கள் வந்தீர்கள் என்ற விபரத்தை சொன்னார். தொடர்ந்து, மேற்படி திரு. பிரபாகரன் அவர்களை சோதனையிட்டதில் அவர் பணம் ஏதும் வைத்திருக்கவில்லை. மேலும், மேற்படி சையது ஹபீப் மற்றும் பிரபாகரன் அமர்ந்திருந்த அறை பார்வையிடப்பட்டு முழுமையாக சோதனையிடப்பட்டது. பின்பு நான் திரு.சையது ஹபீப் மற்றும் திரு.பிரபாகரன் ஆகியோரது எழுத்து மூலமான வாக்குமூலத்தை தனித்தனியாக பதிவு செய்தேன். பின்பு நான் திரு. P.S.சையது ஹபீப் அவர்களிடம் அவர் பணி செய்து கொண்டிருந்த அலுவல் கோப்புகள் சம்பந்தமாக விசாரித்த போது, அவர் .1)Measurment Book - 9626 - Manjamalai Odai 2) Measurment Book - 9632 - Kondamari Odai – Culvert 3) Measurment Book - 9633 – SMP 4) Measurment Book - 9635 – Amaravathi ஆகியவற்றை காண்பித்தார். மேலும், திரு. சையது ஹபீப் அவர்களிடம் அவரது வருகைப்பதிவேடு பற்றி கேட்ட போது, அதனை அவர் தனது அலுவலகத்தில் இருந்து பெற்று ஆஜர் செய்தார். அதனை பார்வையிட்ட போது பக்கம் எண்.12-ல் டிசம்பர் மாதத்திற்கான வருகை பதிவேடு குறிப்புகள் காணப்பட்டது. அதில் மேற்படி, சையது ஹபீப் அவர்கள் கடைசியாக கடந்த 18.12.2024-ம் தேதி கையொப்பம் செய்துள்ளார். மேலும், அவரது 23.12.2024-ந்தேதி பணி குறித்து கேட்ட போது, தான் அலுவலாக திண்டுக்கலுக்கு சென்றுவிட்டு, மதியம் வந்த விபரம் கூறி அது சம்பந்தமான அலுவலக கடித எண். இ2/2024/கோ.பொது/ நாள் : 23.12.2024 கடிதத்தை ஆஜர் செய்தார். மேற்படி (1) வருகைப்பதிவேடு (பக்கம் 1 முதல் 12 வரை எழுதப்பட்டது) மற்றும் (2) மேற்படி கடிதம் எண். இ2/2024/கோ.பொது/ நாள் : 23.12.2024 ஆகியவை விசாரணைக்காக கைப்பற்றினேன். பின்பு நான் சையது ஹபீப் அவர்களிடம் மேற்படி அறையில் யார் வந்து சந்தித்தார்கள் என்று விபரம் கேட்ட போது, அவர் தன்னை யாரும் சந்திக்கவில்லை என்றும், உதவிப்பொறியாளர் திரு. பிரபாகரன் மற்றும் தனது அலுவலக அரசு வாகன ஓட்டுநர் திரு. கருப்பசாமி ஆகியோர்கள்

வந்து பார்த்ததாகவும் தான் அங்கிருந்த M-Book-களை பார்த்துக்கொண்டிருந்ததாகவும் கூறினார். இச்சோதனையின் போது, நடந்த நிகழ்வுகள் செல்போன் மூலமாக வீடியோ பதிவு செய்யப்பட்டது. தகவலின் பேரில், சம்பவ இடத்திற்கு, செயற்பொறியாளர் திரு.A.V.பாரதி-தாசன், பெரியாறு வைகை வடிநில கோட்டம், மதுரை அவர்கள் 19.35 மணிக்கு ஆஜரானார். அவரிடம் நான் திடீர் இணை ஆய்வு குறித்தும், கைப்பற்றப்பட்ட பணம் மற்றும் ஆவணங்கள் குறித்து தகவல் தெரிவித்தேன். மேற்படி கைப்பற்றப்பட்ட மொத்தம் 2 ஆவணங்கள், ஒரு காக்கி நிற காகித கவர், உதவி செயற் பொறியாளர் திரு. சையது ஹபீப் அவர்கள் உதவிப்பொறியாளர் திரு. பிரபாகரன் ஆகியோரின் எழுத்து மூலமான வாக்குமூலங்கள் மற்றும் மேற்படி திடீர் இணை ஆய்வின் போது உதவி செயற் பொறியாளர் திரு. சையது ஹபீப் அவர்கள் வசமிருந்து கைப்பற்றப்பட்ட தொகை ரூ.1,11,800/- ஆகியவற்றை இணைத்து திரு.P.S.சையது ஹபீப், உதவி செயற்பொறியாளர், நீர்வளத்துறை, பெரியாறு வைகை வடிநில உபகோட்டம் - 1, மதுரை அவர்கள் மீது மேல் நடவடிக்கை எடுக்க ஆவண செய்யுமாறு தங்களிடம் ஒப்படைக்கிறேன். ஒப்பம்/- XXXXX 24/12/24 (அ. சித்ரகலா) ஆய்வுக்குழு ஆய்வாளர் / தனி வருவாய் ஆய்வாளர், மாவட்ட ஆய்வுக் குழு அலுவலகம், மதுரை மாவட்டம். இணைப்பு : 1)மதுரை கோகலே ரோடு பென்னிகுயிக் வளாகம், பொதுப்பணித்துறை அலுவலங்கள், பெரியார் மேம்பாட்டு திட்டம் - வை.கா.சீ. இணைப்பு இல்லத்தில் மேற்கொண்ட திடீர் இணை ஆய்வு குறிப்புரை 23.12.2024 - 16.05 மணி முதல் 19.45 மணி வரை, 2) கைப்பற்றப்பட்ட ரொக்கப்பணம் ரூ.1,11,800/-, 3) பெரியார் மேம்பாட்டு திட்டம் - வை.கா.சீ. இணைப்பு இல்லத்தில் வைத்து கைப்பற்றப்பட்ட 2 ஆவணங்கள் மற்றும் காக்கி நிற காகித கவர்-1, 4) நீர்வளத்துறை, பெரியாறு வைகை வடிநில உபகோட்டம் - 1, மதுரை பணிபுரியும் உதவி செயற் பொறியாளர் திரு. சையது ஹபீப் மற்றும் உதவிப்பொறியாளர் திரு. பிரபாகரன் ஆகியோரது வாக்குமூலங்கள்.

Sir, Received this report today (24.12.2024) at 07.35 hrs along with Joint Surprise Check Proceedings dated 23.12.2024, Cash Rs. 1,11,800/-, Statements of Tr.P.S. Syed Habeb and Tr. M. Prabhakaran, seized two documents and one Kakki colour paper cover. After obtaining permission from the Superior Officers, I registered a case in Madurai V&AC Crime No.17/2024 u/s 7 of P.C. Act 1988 as amended by Prevention of Corruption (Amendment) Act 2018 and 106 BNSS 2023 on 24.12.2024 at 08.15 hrs. Sd/- XXXXX 24/12/2024 (K. Kumaraguru), Inspector of Police, V&AC, Madurai.

The original FIR along with report of Tmt.A.Chitrakala Joint Surprise Check Proceedings Dated: 23.12.2024 and Statements of Tr.P.S. Syed Habeb and Tr.M.Prabhakaran are submitted to the Hon'ble Special Judge, Special Court for the Trial of Cases under Prevention of Corruption Act, Madurai and other copies were sent to the officers concerned.

24/12/2024
INSPECTOR OF POLICE
Vigilance Anti Corruption
MADURAI